**மதுராவல பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மதுராவல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 27,600 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு புல் வெட்டும் இயந்திரங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 55,926,179 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவைகளுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 28,231,177 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, நீர் கட்டண பதிவேடு, முத்திரைக் கட்டண பதிவேடு, நீதிமன்ற தண்டப் பணப் பதிவேடு என்பன காணப்படாமையினால் ரூபா 366,874,480 கூட்டுத் தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது பதிவேடுகள் நாளது வரையாக்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்த பிரதேசங்களாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களில் உள்ளடங்கியிருந்த ஏதாவது அசையாத ஆதனங்களில் இருந்து ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதன வரி வலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் புதிய இனங்காணலாக இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 160 ஆம் பிரிவு | 254,215 | நிலுவை ஆதன வரியை அறவிடலின் இறுதி கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்க வில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கும் மேலும், நிலுவை ஆதன வரிக்காக ஆதனங்கள் தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 170,780,122 | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்களையும் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 1988 மே 17 ஆம் திகதி 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | ஆதன வரிகளுக்கு கீழ் வருகின்ற ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆதன வரி திருத்தல் மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,907,882 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,262,899 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,590,602 | 1,731,072 | 1,251,401 | 479,671 | 1,322,992 | 1,408,443 | 1,084,556 | 524,229 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 358,350 | 358,250 | 358,250 | - | 333,500 | 245,450 | 356,741 | - |
| (iii) | ஏனைய வருமானம் | 19,582,850 | 8,800,000 | 13,979,541 | 25,089,403 | 14,635,930 | 10,500,000 | 9,163,990 | 22,852,583 |
| | | 21,531,802 | 10,889,322 | 15,589,192 | 25,569,074 | 16,292,422 | 12,153,893 | 10,605,287 | 23,376,812 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**வீதவரியும் வரியும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ஆதன வரி நிலுவை ரூபா 79,059 ஆக இருந்ததுடன், 03-05 வருடங்களுக்கு இடையிலான நிலுவை ரூபா 27,842 ஆகும். | நிலுவை ஆதன வரி வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஆதன வரி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண மீதி ரூபா 23,292,403 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,797,000 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 12 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | விளக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயல் நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை அளவிடும் | தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| திட்டமொன்று காணப்படவில்லை. | செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அந்த செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

---

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2020 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்த நோக்கங்களுக்காக புதிய உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார நிலைமைகளை கட்டியெழுப்புவதற்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட கால திட்டம் தயாரித்து குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்படாதிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் போது கெப் வண்டிக்கு ஏற்பட்ட வாகன விபத்திற்குரிய | நிதி நட்டத்திற்கு பொறுப்பானவரிடம் | உள்ளூராட்சி ஆணையாளரின் |

| | | |
|---|---|---|
| இயந்திரப் பொறியியலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ரீதியான நட்டம் ரூபா 1,134,037 தொகையை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருந்து அறவிடப்பட வேண்டும். | ஆலோசனை கோரப்பட்டுள்ளதுடன், ஆலோசனை கிடைத்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

---

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆயுர்வேத வைத்தியர் ஒருவரின் வெற்றிடம் காணப்பட்டது. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடமான ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | சபையில் 02 நூலகர் பதவிகள், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர், சுகாதார கண்காணிப்பாளர், சுடலைக்கூட செயற்படுத்துனர் பதவி மற்றும் 04 அலுவலக உதவியாளர் பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 நூலகர் பதவிகளில் ஒரு பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 85,750 தொகையான கடன் மீதி 05 வருடங்கள் முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் 22 மயான நிலங்கள் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்த போதும் அந்த மயான நிலங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சகல மயான நிலங்களையும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 12 மயான நிலங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |